හාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
**Department of Treasury Operations**

තැ.පෙ.1559, මහා භාණ්ඩාගාරය, මුදල් අමාත්‍යාංශය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
தபெ. 1559,பொது திறைசேரி, நிதி அமைச்சு, கொழும்பு 01, இலங்கை
P.O.Box: 1559, General Treasury, Ministry of Finance, Colombo 01, Sri Lanka

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂ ජනරාල් பணிப்பாளர் நாயகம் Director General | දුරකථන தொலைபேசி Telephone | +94 11 2484729 | ෆැක්ස් பெக்ஸ் Fax | +94 11 2431498 | ඊ-මේල් மின்-அஞ்சல் E-mail | dgto@tod.treasury.gov.lk |


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය எனது இல My Number | TOD/REV/M3/02/2022 | ඔබේ අංකය உமது இல Your Number | | දිනය திகதி Date | 15 .11.2022 |

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள் அனைவருக்கும்,

**2022.12.31 அன்றுள்ளவாறு நிலுவை வருமான அறிக்கைகளை முன்வைத்தல்.**

2020.08.28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் : 01/2020 மற்றும் அதற்காக இந்தத் திணைக்களத்தினால் 2020.10.14 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளின் பக்கம் தங்களது மேலான கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. வருமனக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நி.பி.128(2) (இ)ல் உள்ள ஏற்பாடுகளுக்கமைய தமது பொறுப்பின் கீழுள்ள வருமானக் குறியீடுகளுக்கு அமைய அரையாண்டுக்கு ஒருமுறை நிலுவை வருமானக் கணக்கு அறிக்கையினை கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும். திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் அவர்கள் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் பின்வரும் வருமானக் குறியீட்டு இலக்கங்களின் கீழ் ஒன்று திரட்டப்படுகின்ற நிலுவை வருமானம் தொடர்பில் உரிய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அரையாண்டுக்கு ஒருமுறை சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்களை திரட்டி நிலுவை வருமானக் கணக்கு அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயத்திடம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

| வருமான தலைப்பு குறியீட்டு இலக்கம் | விபரம் |
|---|---|
| 20.02.01.99 | அரசாங்க சொத்துக்களில் இருந்து கிடைக்கப் பெறும் வருமானம் - ஏனைய வாடகைகள். |
| 20.02.02.99 | வட்டி – ஏனையவை |
| 20.03.01.00 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - திணைக்கள விற்பனைகள் |
| 20.03.02.99 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - நிருவாகக் கட்டணங்கள், கொடுப்பனவுகள் - நானாவித |
| 20.03.03.02 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - தண்டப் பணமும் அரச உடமையாக்கல்களும் - ஏனையவை |
| 20.03.99.00 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - ஏனைய பெறுகைகள் |

03. ஆகவே, மேற்குறித்த ஒவ்வொரு வருமானக் குறியீட்டு இலக்கங்களின் கீழும் உரிய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பனவற்றிற்கு அமைய, பேணப்பட்டுள்ள நிலுவை வருமானம் கணக்கு அறிக்கைப் புத்தகங்கள் போன்றவற்றை வருமான குறியீட்டு இலக்கங்களுக்கான அறிக்கைகளுடன் முறையாக ஒப்பீடு செய்யப்பட்டு அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் : 01/2020 இற்கு அமைய இந்தத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளைப் பின்பற்றி இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவம் இல TOD/REV/01 இற்கு அமைய 2022.12.31 அன்றுள்ளவாறா தயாரிக்கப்பட்ட நிலுவை வருமானக் கணக்கு அறிக்கையினை 2023.01.13 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் **wijesinghe.krsa@tod.treasury.gov.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிவாய் வேண்டிக்கொள்கிறேன். குறித்த தினத்தன்று நிலுவை வருமானங்கள் ஏதும் இல்லாத பட்சத்தில் அது பற்றிக் குறிப்பிட்டு வெற்றுக் கணக்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. மேலும், ஒவ்வொரு ஆண்டுடனும் தொடர்புபற்ற நிலுவை வருமானத்திற்கு நேரொத்த வகையில் 2022 ஆம் ஆண்டில் திரட்டப்பட்ட வருமானங்கள் தொடர்பான விபரங்கள், அக்காலப்பகுதியினுல் நி.பி. 113 க்கு அமைய திறைசேரியினால் வழங்கப்பட்ட ஒப்புதலுக்கு அமைய விடுவிக்கப்பட்ட ஒவ்வொரு வருமானம் சம்பந்தமான விபரங்கள் என்பனவும் மாதிரிப் படிவம் இல TOD/REV/02 என்ற படிவத்திலும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

05. அத்துடன் அரசிறைக் கொள்கை சுற்றறிக்கை இல 01/2015(V) பிரகாரம் வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான விரிவான கணக்கு அறிக்கை ஒன்றினை உரிய முறையில் பராமரித்துச் செல்லுதல் வேண்டும்.

**ஒப்பம் / எச்.சீ.டீ.எல் சில்வா**
**பணிப்பாளர் நாயகம்**
**திறைசேரி செயற்பாட்டுகள் திணைக்களம்**